தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1974 ஏப்ரல் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. அரசின் தீர்மானங்கள்

(1) வினா நேரம் கைவிடப்படுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை:

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

செட்டியபட்டி கிராமத்தில் ஒரு பள்ளியில் நண்பகல் உணவில் நச்சு கலந்திருந்ததன் காரணமாக இரண்டு மாணவர்கள் இறந்ததும், 91 மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டதும் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவை விதி 44-ன் கீழ் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொடுத்துள்ளார்கள் :—

"மதுரை மாவட்டம் திண்டுக்கல்லுக்கு அருகில் செட்டியபட்டி கிராமத்திலுள்ள ஒரு பள்ளியில் வழங்கப்பட்ட நண்பகல் உணவில் நச்சு கலந்திருந்ததன் காரணமாக இரண்டு மாணவர்கள் இறந்ததோடு 91 மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டது குறித்து".

திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும் இதே பொருள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள்.

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எந்த வகையில் 44-வது விதியின் கீழ் வருகின்றது என்பதற்கான விளக்கத்தினை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், உறுப்பினர் அவர்களும் எடுத்துக் கூற வேண்டுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, தீர்மானத்திலிருந்தே இதனுடைய முக்கியத்துவமும், அவசரமும் நன்றாக விளங்கும். நமது குழந்தைகள் பள்ளிக்குச் சென்று படித்து வரட்டுமென்று பெற்றோர்கள் அனுப்புகிறார்கள். குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல நிலைமையில்